# சுடர் ஒளி

THE SUDAR OLI

10.08.2020 திங்கட்கிழமை




**பிரதமரின் செயலராக மீண்டும் செனரத்!** 8



கொழும்பு, ஓக. 10

தமிழீழக் கொள்கையைக் கைவிட்டு விட்டு அரசியல் நடத்துவதற்கு இனி யாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும். அவ்வாறு இல் லாவிட்டால் அடுத்த தேர்தலில் படுதோல்வி உறு தியாகும்' என்று இராவணா பலய அமைப் பின் பொதுச்செயலர் இத்தேகந்த சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்தார். 2

# தமிழீழக் கொள்கையை உடனடியாக கைவிடுக!

**இல்லையேல் மேலும் தோல்வியடைவீர்கள் என கூட்டமைப்புக்கு இராவணா பலய எச்சரிக்கை!**

## பழைய முகங்களுடன் புதிய அமைச்சரவை

கொழும்பு, ஓக. 10

புதிய அமைச்சரவையில் தினேஷ் குணவர் தன, விமல் வீரவன்ஸ, பவித்ராதேவி வன்னி யாராச்சி, பிரசன்ன ரணதுங்க மற்றும் ரமேஷ் பத்திரன ஆகியோருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என அறியமுடி கின்றது. 2

## அமைச்சுகளுக்குப் போட்டி அதிருப்தியில் கோத்தாபய



கொழும்பு, ஓக. 10

புதிய அரசில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கட்சி யின் பிரபல உறுப்பினர்கள் மற்றும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சில வேட்பாளர்களால் முன்வைக் கப்படும் கோரிக்கைகள் காரண மாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கடும் அதிருப்தியில் 2



## ஐ.தே.க. தலைமை: விலகினார் ரணில்! 2

## 48 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை

கொழும்பு, ஓக. 10

பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 48 லட்சத்து 79 ஆயிரத்து 163 பேர் வாக்களிக்கவில்லை.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 59 லட்சத்து 92 ஆயி ரத்து 96 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் ஒரு 2

## புதினம் தெரியுமோ

ஒரேயொரு தேசியப்பட்டியல் விவகாரத்தால் ஒட்டுமொத் தக் கூட்டமைப்பும் குழம்பிப்போயிருக்கிறது. மாவையை எப்படி யாவது அரசியல் அரங்கில் இருந்து ஓரங்கட்டி, தமிழரசுக் கட்சியையும், கூட்டமைப்பையும் தங்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என் பதே 'சுனா சீனா' கூட்டணியின் எண்ணமாக இருந் தது. இதனால் தேர்தல் பிரசாரத்தின் போதே மாவையைத் தோற்கடிக்கும் சதியில் இறங்கினர். மாவையின் கோட்டையான வலி.வடக்கில் 2

## நீர்வேலி வடக்கில் யுவதி கடத்தல்!

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக் கில் வெள்ளை வானில் வந்த இனம் தெரியாத மர்மக் கும்பலால் இளம் யுவதி 2

## சொத்து விவரங்களை தருமாறு புதிய எம்.பிக்களுக்கு உத்தரவு!

கொழும்பு, ஓக. 10

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களும் தங்கள் சொத்து விவரங்கள் பற்றிய தகவல்களை நாடாளு மன்றில் அமர்வதற்கு முன் சமர்ப்பிக்குமாறு தேசிய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இவர்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் இன்று தெரிவித் துள்ளது. இது தொடர்பில் தேர்தல் ஆணை யம் விடுத்துள்ள அறிவிப்பில், பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் 2

## தமிழர்களுக்கான தீர்வுத் திட்டங்களிலிருந்து அரசால் தப்பிக்க முடியாது

*சாணக்கியன் இடித்துரைப்பு*

கொழும்பு, ஓக. 11

அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்த தன் ஊடாக, தமிழர்களுக் கான தீர்வுத் திட்டங்களை இலகுவாக வழங்க முடியும். இதிலிருந்து நழுவ முடியாது இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்றுக்குத் தெரிவா கியுள்ள இரா.சாணக்கியன் தெரிவித்தார். மட்டக் களப் பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கடந்த காலத்தில் மூன்றில் இரண்டு 2

## வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஓக. 10

பளைப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள காணி யொன்றுக்குள் இருந்து 2

# பழைய முகங்களுடன்...

ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்ற பின்னர் அமைந்த இடைக்கால அரசிலும் இவர்கள் அமைச்சுப்பதவிகளை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
புதிய அரசின் அமைச்சரவை எதிர்வரும் 12ஆம் திகதி கண்டி தலதாமாளிகையில் பதவியேற்கவுள்ளது. இதன்படி வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்தனவும், சுகாதாரத்துறை அமைச்சராக பவித்ராதேவி வன்னியாராச்சியும், சுற்றுலா மற்றும் விமானசேவைகள் துறை அமைச்சராக பிரசன்ன ரணதுங்கவும் நியமிக்கப்படவுள்ளனர் என தெரிய வருகின்றது. கடந்த முறையும் இவர்கள் மேற்படி அமைச்சு விடயதானங்களையே வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
தேசியப் பட்டியல்மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கு கல்வி அமைச்சும், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு நீதி அமைச்சு பதவியும் வழங்கப்படவுள்ளன.
இராஜாங்க அமைச்சர்களாக கெஹலிய ரம்புக்வெல, மஹிந்தானந்த அளுத்கமகே, வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கும் இம்முறை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.
நாமல் ராஜபக்சவுக்கு இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதுடன், மேலும் சில இளம் உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.
அதேவேளை, சபாநாயகர் பதவிக்கு மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை முன்மொழிவதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.
சபாநாயகர் பதவிக்கு சமல் ராஜபக்ஷவை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அவர் அப்பதவியை நிராகரித்திருப்பதன் காரணமாகவே சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் மஹிந்த யாப்பாவுக்கு அப்பதவி வழங்கப்படவுள்ளது. (ம-44)

# தமிழீழக்...

பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கி சரிந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'சிங்கள மக்களை எதிரிகளாகக் காண்பித்தும், சமஷ்டி போன்ற பிரிவினைவாதக் கொள்கைகளையும் முன்னிலைப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் அரசியல் நடத்தியது. மாறாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்காக எவ்வித அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. இந்த நிலையில் தாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை அறிந்துகொண்டு தெளிவுபெற்ற தமிழ் மக்கள் இம்முறை தக்கபாடத்தைப் புகட்டியுள்ளனர்.
அத்துடன் மாற்றுத் தலைமைகளுக்கு வாக்களித்துள்ளனர். அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்றியதாலேயே டக்ளஸின் கட்சிக்கு கடந்தமுறையை விடவும் இம்முறை வாக்குகள் கிடைக்கப்பெற்று ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பிள்ளையானின் கட்சிக்கும் மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.
எனவே, மக்களின் மனோநிலை என்னவென்பதை கூட்டமைப்பு புரிந்துகொள்ளவேண்டும். கொள்கைகளை மாற்றிக்கொண்டு இலங்கையர்களாக முன்நோக்கி பயணிக்கும் வகையில் தனது அரசியல் பயணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அதேவேளை, தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ள அரசும் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும்' -என்றார். (ம-44)

# அமைச்சுகளுக்கு....

உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. பல்வேறு உபாயங்களை கையாண்டு மறைமுகமாகவும் நேரடியாகவும் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, அமைச்சுப் பதவிகளை கேட்ட தரப்பினரிடம் 'நாட்டுக்கு சேவையாற்ற அமைச்சுப் பதவி அவசியமா?' என ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.
பதவி மற்றும் வரபிரசாதங்களை எதிர்பார்த்து அரசியலுக்கு வரும் தரப்பினரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்று தெரிவித்துள்ள கோத்தாபய பதவிகளை எதிர்பாராமல் நாட்டுக்காக சேவையாற்ற வரும் தரப்பினரே எனக்குத் தேவை என்றும் தெரிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (ம)

# நீர்வேலி...

யொருவர் கடத்தப்பட்டார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
வெள்ளை வானில் சென்ற நான்கு பேர் கொண்ட குழுவினர் நீர்வேலிப் பகுதியில் உள்ள வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டில் இருந்தவர்களைத் தாக்கியுள்ளனர். வீட்டில் இருந்த 20 வயது யுவதியை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ம-20)

# 48 லட்சம் பேர்...

கோடியே 33 லட்சத்து 87 ஆயிரத்து 951 பேர் வாக்களித்திருந்தனர். 26 இலட்சம் வரையிலானோர் வாக்களிக்கவில்லை.
இந்த நிலையில் பொதுத் தேர்தலில் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை 48 லட்சத்தைத் தாண்டியுள்ளது. கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-க)

# சொத்து விவரங்களை தருமாறு....

பட்ட பல வேட்பாளர்கள் ஏற்கனவே தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சொத்து விபரங்களை இன்னும் சமர்ப்பிக்காத மீதமுள்ள உறுப்பினர்கள், இந்த செயல்முறையை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மேலும், பொதுத் தேர்தலில் வெற்றிபெறாத வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான காலக்கெடு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் - என்றுள்ளது. (ம)

# தீர்வுத் திட்டங்களிலிருந்து...

பெரும்பான்மையில்லையென தமிழர்களை அரசு ஏமாற்றி வந்தது. இதனையே சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை சாட்டாகக் கூறிவந்தது. ஆனால் இனி அவ்வாறு ஏமாற்ற முடியாது. இலகுவாக புதிய அரசமைப்பு உருவாக்கங்களைச் செய்ய முடியும்.
இதேபோன்று தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான, சர்வதேசத்தின் அழுத்தங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
2009ஆம் ஆண்டு சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய காலம் தற்போது வந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் மூன்றாவது சக்தியாகவே இருக்கின்றது. 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களுக்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து அழுத்தங்களை வழங்கி அதற்கான தீர்வை இலங்கை வழங்க வேண்டும். கடந்த அரசில் ஜனாதிபதியும், பிரதமரும் வேறுவேறு திசையில் இருந்தனர். ஆனால் இன்று சகோதரர்கள் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருக்கின்றனர். தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு இதனைவிட நல்லதொரு சந்தர்ப்பம் வேறு அமையாது- என்றார். (ம-க)

# புதினம் தெரியுமோ?

உள்ள தமிழரசுக் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானோருக்கு மாகாண சபையில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்ற ஆசை முதலில் தூண்டிலாகப் போடப்பட்டது. அதற்கு நிறையப் பேர் இழுபட்டார்கள். மாவையின் வாக்குவங்கியான வலி.வடக்கிலேயே. மாவையின் விருப்பிலக்கத்தை தவிர்த்து, 'சூனா சீனா' கூட்டணி விருப்பிலக்கங்களுக்கு மட்டும் அவர்கள் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்கள். இதனால் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் குழம்பினார்கள். இதனால் தான் ஏனைய வேட்பாளர்களைத் தவிர்த்து, 'சூனா சீனா' கூட்டணியை முன்னிலைப்படுத்தி வலி.வடக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றை மாவை, திடீரென ரத்துச் செய்திருந்தார். அதன் பின்னர் தனக்கு எதிரான சதியை முறியடிக்க மாவையும் தீவிர பிரசாரத்தில் இறங்கினார். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டது. பெரும்பாலான வேட்பாளர்கள் மாவையின் இலக்கத்தை முன்னிலைப்படுத்த தவறியதாலும், 'சூனா சீனா' கூட்டணி அவருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையாலும் தேர்தலில் அவரால் கணிசமான விருப்பு வாக்குகளைப் பெறமுடியவில்லை. அதனால் தோல்வியடைந்தார்.
அண்ணை எப்ப போவார், திண்ணை எப்ப காலியாகும்? எனக் காத்திருந்த 'சூனா சீனா ' கூட்டணி இதுதான் சமயமென்று காய்வெட்டும் வேலையில் இறங்கியது. சம்பந்தரிடம் போய் மாவைக்கு ஏன் தேசியப்பட்டியல் நியமனத்தை கொடுக்கக் கூடாது என்று இரவிரவாக 'சூனா சீனா' கூட்டணி வகுப்பெடுத்து அவர் மனதைக் கரைத்து, குகதாசனுக்கு அதைக் கொடுக்க முடிவானது. ஆனால் குகதாசன் அரசியல் நேர்மையோடு கட்சித் தலைவரான மாவை எம்.பியாகாத நிலையில் நான் அதை எடுப்பது சரியல்ல. அவருக்கே தேசியப்பட்டியலைக் கொடுங்கள் என ஒரே போடாகப் போட, 'சூனா சீனா ' கூட்டணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தங்களைப் போல குகதாசனும் பதவி ஆசையில் உடனே ஒத்துக்கொள்வார் என நினைத்தால் இப்படி குண்டைப் போட்டு விட்டாரே என்று நிலைதடுமாறினர். எனவே அடுத்த ஆயுதத்தைக் கையில் எடுத்தனர். அதுதான் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்ட அம்பாறைக்கு தேசியப்பட்டியல் நியமனத்தைக் கொடுப்பது என்ற யோசனை.
சம்பந்தர் வழக்கம்போல இதற்கும் தலையாட்டியதால், சர்ச்சை வெடித்தது. தமிழரசுக் கட்சித் தலைவரான மாவைக்கோ, பங்காளிக்கட்சித் தலைவர்களான செல்வத்துக்கோ, சித்தார்த்தனுக்கோ எதுவும் சொல்லப்படாமல் தமிழரசுக் கட்சிச் செயலாளரான துரைராஜசிங்கத்தின் கடிதத்தோடு அலுவலை முடிக்கப் பார்த்து, எல்லாம் இழுபறியாகி விட்டது. இப்போது கலையரசனுக்கும் அம்பாறை மக்களுக்கும் ஆசை காட்டி விட்டு, முதலில் அனுப்பிய கடிதத்தை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இனியென்ன பிரதேசவாதம் பற்றியெரிய சம்பந்தர் வழியெடுத்துக் கொடுத்து விட்டார். முதலிலேயே மாவையை நியமித்திருந்தால் இந்தச் சர்ச்சை எழ வாய்ப்பில்லை. ஆனால் கேட்கக் கூடாதவர்களின் சொல்லைக் கேட்டதால் கூட்டமைப்பு கிழக்கில் இன்னொரு பின்னடைவு ஏற்பட சம்பந்தர் காரணமாகிவிட்டார்.

- பட்சி

# ஐ.தே.க...

கொழும்பு, ஓக. 10
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலகினார் என்று கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் காரியவசம் ரணிலின் பதவி விலகல் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். புதிய தலைவர் பதவிக்கு ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்த்தன, தயா கமகே, அகில விராஜ் காரியவசம் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (ம)

# வெடிக்காத...

வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி ரக குண்டு மீட்கப்பட்டுள்ளது. பளைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்தே மேற்படி குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-113)

# மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றக்கூடிய ஆபத்து

## எச்சரிக்கின்றது சுகாதாரப் பிரிவு

கொழும்பு, ஓக.10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்று முதல் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் மீண்டும் ஒரே நேரத்தில் ஒன்று கூட வாய்ப்புக்கள் உள்ளமையால், இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது என தொற்று நோய்ப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், பரிந்துரைக்கப்பட்டுள்ள சுகாதார முறைமைகளைத் தொடர்ந்தும் அதே முறையில் பின்பற்றுமாறும் அவர் கோரியுள்ளார்.

நாட்டில் இதுவரை 2844 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 2,579 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் தற்போது 252 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதுடன் 11 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

## களியாட்ட நிகழ்வில் போதைப்பொருள் பாவனை

### 5 பெண்கள் உட்பட 20 பேர் கைது

பாணந்துறை, ஓக.10

பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வொன்றின் போது போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 5 பெண்கள் உட்பட 20 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் பாணந்துறை மிலானியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட இக் களியாட்ட நிகழ்வில் ஹெரோய்ன், கேரளக் கஞ்சா மற்றும் போதைப்பொருள் மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## சுதந்திரக் கட்சியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு 14 பேர்

கொழும்பு, ஓக.10

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து 14 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொலனறுவை, குருநாகல், காலி, பதுளை, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, கேகாலை, மொனராகலை, கம்பஹா மற்றும் வன்னி மாவட்டங்களில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்தும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனித்தும் போட்டியிட்டது.

அதனடிப்படையில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவருமான மைத்திரிபால சிறிசேன மற்றும் தயாசிறி ஜயசேகர, ஷான் விஜேலால், சாந்த பண்டார, சாமர சம்பத் தசநாயக்க, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜகத் புஷ்ப குமார, லசந்த அழகியவன்ன, சாரதி துஷ்மந்த, நிமல் சிறிபால டிசில்வா, காதர் மஸ்தான் ஆகியோருடன் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சியில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவாகி உள்ளனர். (ரி3)



## மலையகத்தில் கடும் மழை, மண்சரிவு அபாய எச்சரிக்கை

நுவரெலியா, ஓக.10

நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பெய்து வரும் கடும் மழை காரணமாக, மாவட்டத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் அந்த மாவட்டத்திற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியின் மோகினி எல்லை பகுதியில் பெரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்த வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

### நாடு முழுவதும் இன்று

## பாடசாலைகள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஓக. 10

நாடளாவிய ரீதியிலான கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று அனைத்து பாடசாலைகளும் இயங்க ஆரம்பித்துள்ளன. மாணவர்களும் பெரும் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு வருகை தந்ததை காணமுடிகின்றது. நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தாக்கம் காரணமாக கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் இலங்கையில் கொவிட் 19 தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த மாதம் தொடக்கம் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்திருந்தன. பொதுத்தேர்தல் காரணமாக மீண்டும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் இன்று கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொவிட் 19 பாதுகாப்பு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் மாணவர்கள் அதிகளவில் இன்று பாடசாலைகளுக்கு வருகை தந்தனர் எனப் பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர். 200 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலைகளில் சாதாரணமாக 5 நாள்களும் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கபடவுள்ளமையுடன் 200 மாணவர்களுக்கு அதிகமான பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்புகளாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கபடவுள்ளன. 200 மாணவர்களுக்கு அதிகமான பாடசாலைகளின் முதலாம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமையும், 2 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமையும், 3 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் புதன் கிழமையும் இடம்பெறவுள்ளன. அத்துடன் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 4 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. (ரி1-18)



## விசேட சுற்றிவளைப்பில் 331 பேர் கைது!

கொழும்பு, ஓக.10

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், 331 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹெரோய்ன் வைத்திருந்த 122 பேரும், சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 94 பேரும், ஐஸ் ரகப் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 9 பேருமாக 331 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி2)

## ஒன்பதாவது நாடாளுமன்றில் 11 பெண்களுக்கே பிரதிநிதித்துவம்

கொழும்பு, ஓக.10

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலைத் தொடர்ந்து, நாட்டின் 9ஆவது நாடாளுமன்றத்தை 11 பெண்களே பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர். பொதுஜன பெரமுனவின் சார்பில் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, பவித்திரா வன்னியாராச்சி, கீதா குமாரசிங்க, ரஜிக்கா விக்கிரமசிங்க, முடித்தடி சொய்ஸா, கோகிலா குணவர்த்தன ஆகியோர் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற 17 தேசியப்பட்டியல் ஆசனங்களில் இரண்டு சீதா ஆரம்பிபொல, மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தலதா அத்துக்கோரள, ரோஹினி விஜயரத்ன ஆகியோர் தேர்தலில் நேரடியாகத் தெரிவு செய் யப்பட்டுள்ளதோடு ,அக் கட்சிக்கு கிடைக்கப் பெற்ற தேசி யப் பட்டியல் ஊடாக டயானா கமகே அங்கத்து வத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலிருந்து இம்முறை எந்தவொரு பெண் பிரதிநிதியும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

# பிலிப்பைன்ஸின் விசேட விமானங்கள் மத்தள விமான நிலையத்துக்கு!

கொழும்பு, ஒக.10




எயார் ஏசியா பிலிப்பைன்ஸ், மாலுமிகளை இடம்மாற்றும் செயற்பாட்டுக்காக இலங்கையின் மத்தள விமான நிலையத்திற்கு சிறப்பு விமானங்களை இயக்கத் தொடங்கியுள்ளது.

இதன் அடிப்படையில், முதலாவது எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் இ.சட் 28161 விமானம் 13 வெளிநாட்டு மாலுமிகளுடன் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. இந்த விமானம் இன்று பிற்பகல் 2.15 மணியளவில் 14 பிலிப்பன்ஸ் மாலுமிகளுடன் பிலிப்பைன்ஸ் நோக்கிப் புறப்படவுள்ளது.

கொவிட்19 தொற்றுநோய் நாட்டிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இலங்கை சர்வதேச கப்பல் சமூகத்தின் மத்தியில் கப்பல்களின் பாதுகாப்பான செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கப்பல் குழுவினரை மாற்றுவதற்கு வசதியான இடமாக அமைந்துள்ளமை இந்த நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் இறுதி வாரத்திலிருந்து 50 க்கும் மேற்பட்ட திருப்பி அனுப்புதல் மற்றும் மாலுமிகள் குழு பரிமாற்ற விமானங்கள் மத்தளவிலிருந்து இயக்கப்படுகின்றன.

இதேவேளை குழு மாற்றங்கள் இலங்கை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)



# வீதி செப்பனிடும் பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு

வவுனியா, ஒக.10

வவுனியா மன்னார் பிரதான வீதி செப்பனிடும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

10 வருடங்களுக்கு மேலாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இவ் வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இணைக்கப்பட்ட வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன.

புனரமைப்புப் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொரோனா காரணமாக முற்றாக தடைப்பட்டிருந்தன. இலங்கையில் கொரோனாத் தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில் தற்போது துரித கதியில் வீதி செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் வவுனியா- மன்னார் பிரதான வீதியில் காணப்படும் பாலங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கற்பகபுரம் பம்மைமடு போன்ற பகுதி வரை காபெற் போடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளில் இடம்பெற்று வருகின்றன. கடந்தகாலங்களில் கண்துடைப்புக்காக வீதிகளின் குழிகளை அடைக்கும் பணிகள் இடம்பெற்ற போதும் குழிகள் முழுமையாக அடைக்கப்படவில்லை.

இதனால் மக்கள், பிரமணாலங்குளம் பகுதியில் வவுனியா மன்னார் பிரதான வீதியின் நடுவே 'மன்னார் வீதி விவசாய நிலமாக மாற்றப்பட்டுள்ளது' என்ற வாசகத்தை தாளில் எழுதி அதனை வாழை மரத்தில் கட்டி வாழை மரத்தை வீதியின் நடுவே காணப்பட்ட குழியினுள் நட்ட சம்ப வங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1-18)

# ஒன்லைன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு

கொழும்பு, ஒக.10

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை ஒன்லைனில் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர் இப் பதிவு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தலைமை சார்ஜென்ட் ஆர்ம்ஸ் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய நாடாளுமன்றின் அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் எனவும் தலைமை சார்ஜென்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்தொடரும் தொடங்குவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுகிறார்கள். இது முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் செய்யப்பட்டிருந்தாலும், நாட்டின் தற்போதைய சுகாதார நிலையைக் கருத்திற்கொண்டு ஒன்லைனில் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் நாளை

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பன்னிரண்டாவது நாளாகிய நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் "இலங்கைத் தமிழர் இசை மரபு" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# புதிய உறுப்பினர்களில் மூவர் முனைவர் பட்டம் பெற்றவர்கள்

கொழும்பு, ஒக. 10

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டவர்களில், அதிக வாக்குகளைப் பெற்று புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மூவரும் முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில், அதிக வாக்குகளைப் பெற்றவர்களில் முதலாவதாக கம்பஹா மாவட்டத்தில், பேராசிரியர் நாலக கொடஹேவா தெரிவாகியுள்ளார். அவர் 325,479 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாவதாக, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவாகியுள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவர். அவர் 141,991 வாக்குகளைப் பெற்றுள்ளார். மூன்றாவதாக, ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான வைத்தியர் ஜயசுமன என்பவராவர். அவர் 133,980 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். (ரி2)



# பற்றைக்குள் வீசப்பட்ட சிசுவின் சடலம் மீட்பு

பண்டாரவளை, ஒக.10

பண்டாரவளை, பூனாகலைப் பகுதியைச் சேர்ந்த ஆர்னோல்ட் பெருந்தோட்டக் குடியிருப்பு ஒன்றின் பின்புறப் பற்றைக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் பெண் சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து, கொஸ்லந்தைப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸாரால் அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை யின் போதே குறித்த சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிசுவின் சடலத்தை பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிவான் கீர்த்தி கும்புறுஹேன, சட்ட வைத்திய பரிசோதனைக்காக பதுளை அரச மருத்துவமனைச் சட்ட வைத்திய அதிகாரி பிரிவிடம் ஒப்படைத்து அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

28 வயது நிரம்பிய சிசுவின் தாயை கைதுசெய்யும் படி நீதிவானால் விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, பொலிஸார் அப் பெண்ணைக் கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.

சிசு இறந்த நிலையில் பிரசவமானதா அல்லது கொலை செய்யப்பட்டதா என்று அறியும் வகையில் தீவிர புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகின்றது. (ரி2)




# 11வயதுச் சிறுமி கின்னஸ் சாதனை

கொழும்பு, ஓக. 10

யாழ்ப்பாணம், அனலைதீவைச் சேர்ந்த சங்கவி ரதன் எனும் பதினொரு வயதுச் சிறுமி, இடுப்பில் வளையம் ஒன்றைச் சுற்றியவாறு, றூபிக்கின் கனசதுரத்தின் தனித்தனி நிறங்களை ஒரு கையினால் ஒழுங்குபடுத்தி கின்னஸ் உலகசாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இந்தச் சிறுமி ஒகஸ்ட் 1 ஆம் திகதி கனடா மிஸிஸாகா நகரில் கின்னஸ் சாதனை நிறுவனப் பிரதிநிதிகள் முன்னிலையில், 55 நிமிடங்களில் 30 தடவைகள் 3x3 றூபிக்கின் கனசதுரத்தை ஒழுங்குபடுத்தி, 25 தடவைகள் என்றிருந்த முன்னைய கின்னஸ் சாதனையை முறியடித்து, புதிய உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

கொரோனா காலத்தில் வீட்டில் இருந்த காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தி இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். புத்தகம் ஒன்றை வாசித்தும், பல காணொலி களைப் பார்த்தும் இதில் உள்ள நுட்பங்களைக் கற்றுத் தெரிந்து மூன்று மாதங்களாகப் பயிற்சி யில் ஈடுபட்டு இவர் இதனைச் சாத்தியமாக்கி யுள்ளார். சங்கவி இந்தச் சாதனையை நிறைவேற்ற இடுப்பில் வளையம் சுற்றுவதை தனது இளவய தில் கற்றிருந்தமை உதவியாக இருந்தது.

பிறப்பின்போது ஏற்பட்ட காயம் ஒன்றினால் வலக்கரம் இயங்க முடியாத நிலையிலும், தனது இடக்கரத்தினால் இவர் இந்தச் சாத னையை மேற்கொண்டு பலருக்கு ஒரு முன்னு தாரணமாகத் திகழ்கின்றார். (ரி2)

# கொரோனாத் தடுப்பு மருந்தில் தேசியவாதம் காட்டுவது தவறு

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டு

ஜெனிவா, ஓக.10

கொரோனாத் தடுப்பு மருந்து விவகாரத்தில் தேசியவாதத்தை காட்டுவது மிகவும் தவறானது என்று உலக சுகாதார அமைப் பின் தலைவர் பெட்ரோஸ் அதனாம் தெரிவித்துள்ளார். சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் அமைந்துள்ள அமைப் பின் தலைமையகத்தில் இருந்து காணொலி மூலம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது: உலகம் முழுவதும் பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் நோய்க்கு இது வரை மருந்து கண்டுபிடிக் கப்படவில்லை. உலகின் பல்வேறு நாடுகள் அதற் கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. கொரோனாத் தடுப்பு மருந்து விவகாரத்தில் தேசியவாதத்தை காட்டு வது மிகவும் தவறானதாகும். அத்தகைய சுயநலத்தால் யாருக்கும் நன்மை ஏற்படாது. நோய்களிலிருந்து விடுபட வேண்டுமென்றால் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும். தற்போ தெல்லாம் அனைத்து நாடுக



ளின் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. இத்தகைய சூழலில் மற்றைய நாடுகளில் கொரோனா பரவிக் கொண்டி ருந்தாலும் தங்கள் நாட்டுக்கு மட்டும் பாதுகாப்பு தேடுவது மிகவும் தவறு என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)

போதை தலைக்கேறிய நிலையில்

# புத்தரைத் தாக்கிய மூவர் கைதாகினர்

திருகோணமலை, ஓக.10

திருகோணமலை சேருநுவர பகுதியில் மதுபோதை யில் புத்தர் சிலைகளை உடைத்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட் டுள்ளனர் என சேருநுவர பொலிஸார் தெரிவித்துள் ளனர். கைது செய்யப்பட் டுள்ள மூவரும் மதுபோ தையில் நேற்றிரவு சேருநு வர சந்திக்கு அருகில் உள்ள புத்தர் சிலைகளை உடைத்து சேதமாக்கியுள் ளனர். மூவரும் திருகோ ணமலை சேருநுவர, தெஹி வத்த வேவெல கெதர, அம்பாலே மெத நுவர பகு திகளைச் சேர்ந்த 45 வயதுடைய வீரக்கோன் முதியன்சலாகே ரஞ்சித் அபேரத்ன, 30 வயது டைய தனிபல முதியன் சலாகே அரேஸ் ஜெய சிங்க மற்றும் 26 வயது டைய சமீர சம்பத் பண்டார சகலசூரிய எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ரி1)

# சடலம் மீட்பு

கொழும்பு, ஓக.10

கொழும்பு கொட்டாஞ் சேனை பகுதியிலிருந்து நப ரொருவரின் சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது. அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபரின் சடலமே இவ்வாறு கார் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள் ளது.

அவர் கொட்டாஞ்சேனை பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றில் திட்ட மிடல் முகாமையாளராகக் கடமையாற்றி வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்ற பின் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைகள் மேற்கொள் ளப்படவுள்ளன எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளதுடன், இது தற்கொலையாக இருக்க லாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ரி1)

# ஐ. தே.கவின் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கைது



கொழும்பு, ஓக.10

ஐக்கிய தேசியக் கட்சி யின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அநுர மஞ்சநாயக்க பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கலிக முவபொயகொட பகுதியிலுள்ள அவரது இல்லத் தில் வைத்து துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 14 ரவைகளுடன் அவர் கைது செய்யப்பட்டுள் ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரது வீட்டை சோதனையிட்டபோது, நிலத்தை அக ழும் அதிநவீன இயந்திரங்கள் இரண்டும் கைப்பற் றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி1)



# வேட்டையாடப்படும் வெளிநாட்டுப் பறவைகள்!

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஓக.10

சரசாலை குருவிகள் சரணால யத்துக்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளை விசமிகள் சிலர் வேட்டையாடி வருகின்றனர் என அப்பகுதி மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

சரசாலை குருவிகள் சரணால யப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளை நாடி, காலை, மாலை வேளைகளில் பெரும ளவான பருவகால வெளிநாட் டுப் பறவைகள் வருவது வழக்கம். அவ்வாறு வரும் பறவைகளை விசமிகள் சிலர் வேட்டையாடி வருகின்றனர். பறவைகள் மீது வலைகளை வீசி வேட்டையாடி வருவத னால், தற்போது அப்பகுதிக்கு பறவைகளின் வருகை வெகு வாகக் குறைவடைந்துள்ளது. ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் ஒன்றுகூடும் விசமிகள், இவ்வாறு பறவை களை வேட்டையாடி வருகின் றனர். சில தடவைகள் ஊரவர் கள் வேட்டையாட முற்பட்ட விசமிகளை மடக்கிப் பிடித்து எச்சரித்து விடுவித்த போதி லும் அவர்கள் வேட்டையை நிறுத்தாது சன நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வேட் டைகளில் ஈடுபட்டு வருகின்ற னர்.

இது தொடர்பில் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, இத்த கைய சட்டவிரோத வேட் டையாளர்கள் மீது நடவ டிக்கை எடுக்க வேண்டுமென, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி1)

# நேற்று மூவருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஒக.10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மூன்று பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் சேனாபுர புனர்வாழ்வு மையத்திலுள்ள இருவருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,844 ஆக அதிகரித்துள்ளது. (ரி1)

# மேலும் 14 பேருக்கு தனிமைப்படுத்தல் நிறைவு

கொழும்பு, ஒக.10

இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் மையங்களில் இருந்து மேலும் 14 பேர் இன்று வீடுகளுக்குத் திரும்பவுள்ளனர்.

இவர்கள் இன்று மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. அத்தோடு, தனிமைப்படுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்தமைக்கான சான்றிதழும் அவர்களுக்கு இதன்போது வழங்கப்படவுள்ளது. 27 ஆயிரத்து 907 பேர் இதுவரையில் தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது.(ரி2)

பிரிட்டனில் பெண் துஷ்பிரயோகம்:

# இலங்கைத் தமிழருக்கு 8 வருட சிறைவாசம்

லண்டன், ஒக.10

பிரிட்டனில் பெண் ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட இலங்கைத் தமிழர் ஒருவருக்கு 8 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் வசிக்கும் 40 வயதுடைய இலங்கைத் தமிழருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

உணவகம் ஒன்றின் மேலாளராக பணியாற்றிய இலங்கையர் தனது பணியிடத்தில் வைத்து பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். இச் சம்பவம் இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்றுள்ளது. இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற நிலையில் நீதிமன்றம் மேற்கண்ட வாறு தீர்ப்பளித்தது. பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை, கொடூரத் தாக்குதல் மேற்கொண்டமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 8 ஆண்டுகள் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் அவருக்கு பிணை வழங்குவதற்கு முன்னர் அவரது தண்டனையின் மூன்றில் இரண்டு பங்கையாவது அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ரி3)

# சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு பிரதமர் உந்து சக்தியாக இருக்கவேண்டும்

## முருத்தெட்டுவே ஆனந்ததேரர் ஆசீர்வாதம்

கொழும்பு, ஒக.10



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு உந்து சக்தியாக செயற்படுவதுடன், நாட்டை கட்டியெழுப்புவதற்கான வலிமையும் பிரதமருக்கு கிடைக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் வழங்கினார் முருத்தெட்டுவே ஆனந்ததேரர்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர், அவர் நேற்று பிற்பகல் நாரஹேன்பிட்டி அபயராம விகாரைக்கு விஜயம் செய்து, மேல் மாகாணத்தின் தலைமை சங்கநாயக்கர், வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

முழு இலங்கையிலும் மக்கள் அதிக விருப்பு வாக்குகளை உங்களுக்கு வழங்கியமைக்கு காரணம் உங்கள் மீது அவர்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையே ஆகும். இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் உங்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் நீங்கள் 2015 ஆம் ஆண்டு வெளியேறிய போதிலிருந்து மக்களுக்கு இருந்தது. சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு உந்து சக்தியாக செயற்படும் வகையில் நீங்கள் பிரதமராக பதவியேற்றுக் கொண்டீர்கள். உங்களை ஒரு விவாதத்துக்கு அழைத்து வர சிலர் பயந்த ஒரு காலம் இருந்தது, இன்று உங்களுக்குப் பின்னால் வருவதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள்,

நீங்கள் இந்த நபர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். அன்று நீங்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறிச் சென்றபோது உங்களைப் பார்ப்பதற்காக பலர் பஸ்களில் தங்காலைக்கு வருகை தந்தனர். உங்களை சுற்றி இருந்தவர்கள் எந்தப் பக்கம் சாய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள், எனவே உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும், அவர்கள் வருவது நல்லதற்கல்ல. இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப உங்களுக்கு வலிமை கிடைக்கட்டும் -என்றார்.(ரி2)

# நாட்டில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக.10



நாட்டில் சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் இன்று காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பேருவளையிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்தை அண்டிய பகுதிகளில் உயர் அலைகள் காரணமாக கடல் அலைகள் கரையை அண்டிய நிலப்பகுதிகளுக்கு வரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி2)

# 176 இலங்கையர் நாட்டை வந்தடைந்தனர்

கொழும்பு, ஒக.10

வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலும் 176 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரிலிருந்த 28 இலங்கையர்களும், ஜப்பானிலிருந்த 148 இலங்கையர்களுமே இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களுக்கு பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(ரி2)

அரசவை தகர்க்கப்பட்ட சம்பவம்;

# குருநாகல் மேயர் உள்ளிட்ட குழுவை கைது செய்ய 4 விசேட குழுக்கள்

குருநாகல், ஒக.10

குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட குழுவை கைது செய்வதற்காக 4 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குருநாகல் மாநகர மேயர், நகர ஆணையாளர் மற்றும் மேலும் மூவரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பதில் பொலிஸ்மா அதிபருக்கு அண்மையில் பணிப்புரை விடுத்திருந்தார். அந்த ஐவரையும் நீதி மன்றத்தினூடாக பிடியாணை பெற்று கைது செய்யுமாறு சட்டமா அதிபர் வலியுறுத்தியிருந்தார்.

குருநாகல் இரண்டாவது புவனேகபாகு மன்னரின் அரசவைக் கட்டடத்தைச் சேதப்படுத்தியமை தொடர்பாக இவர்களைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் கூறியுள்ளார்.மேலும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். இந்த நிலையில், சந்தேகநபர்கள் இருக்கும் இடத்திற்கு பொலிஸார் செல்லும் போதெல்லாம் அவர்கள் அங்கு இருப்பதில்லை என குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நிலையிலேயே குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட குழுவை கைது செய்வதற்காக 4 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ரி1)

# லெபனான் அரசுக்கு எதிராக உக்கிரமடையும் போராட்டம்

பெய்ரூட் வெடி விபத்துக்கு அரசின் அலட்சியமே காரணம் என்று குற்றஞ்சாட்டி லெபனானில் இடம்பெறும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் 728 பேர் காயமடைந்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் தடையை மீறி நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைய முற்பட்டமையை அடுத்து பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் வெடித்தது. இதன்போது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத்தாக்குதல்களையும், தடியடித்தாக்குதல்களை யும் நடத்தியுள்ளனர்.

அரசுக்கெதிரான போராட்டங்களையடுத்து லெபனானின் தகவல் துறை அமைச்சர் மனல் அப்டெல் சமட் தாம் பதவியைத் துறப்பதாக அறிவித்துள்ளார். (ரி1)







## சர்வதேச விசாரணை அழைப்புகளை நிராகரித்தார் லெபனான் ஜனாதிபதி

பெய்ரூட், ஒக.10

பெய்ரூட் வெடி விபத்து தொடர்பான சர்வதேச விசாரணை அழைப்புகளை லெபனான் ஜனாதிபதி மைக்கேல் அவுன் நிராகரித்துள்ளார். பெய்ரூட்டில் ஏற்பட்ட வெடி விபத்து தொடர்பாக ஒளிவு மறைவில்லாமல் சர்வதேச விசாரணைக்கு உத்தர விட வேண்டும் என்று லெபனான் நாட்டின் அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர். அதேபோல், லெபனானுக்கு பயணம் மேற்கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோனும் சுதந்திரமான விசாரணையை வலியுறுத்தினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் இதனை வலியுறுத்தியிருந்தது. இந் நிலையில் இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம், அமைச்சகம் இது தொடர்பான விசாரணையை ஏற்கனவே அறிவித்து விட்டது. பெய்ரூட் வெடி விபத்து தொடர்பான சர்வதேச விசாரணைகளுக்கு உடன்பாடில்லை எனத் தெரிவித்தார். (ரி1)

## வெள்ளத்தில் சிக்கி 30 பேர் உயிரிழப்பு

சியோல், ஒக.10

தென் கொரியாவில் 46 நாட்கள் தொடர்ச்சியாக பெய்த கனமழையையடுத்து ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களில் சிக்குண்டு இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஏழு ஆண்டுகளின் பின்னர் தென்கொரியாவில் மிக நீண்ட பருவமழை பெய்து வருகிறது. கன மழை காரணமாக நேற்றைய நிலைவரப்படி சுமார் 6000 பேர் அவர்களது சொந்த இடங்களிலிருந்து பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர். 1,300க்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. 9,300 ஹெக்டேயருக்கும் மேற்பட்ட விவசாய நிலம் நீரில் மூழ்கியுள்ளது. (ரி1)



**மேற்கு ஆபிரிக்க நாட்டில்**

## மர்மக் குழு சூடு: 20 பேர் சாவு

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவின் நவுங்கு நகரில் நேற்று முன்தினம் கால்நடைச் சந்தையில் மர்மக் கும்பலொன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று, கால்நடைச் சந்தை வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த மர்மக் கும்பல் ஒன்று கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. சந்தையில் திரண்டிருந்த மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கும் இங்குமாக சிதறி ஓடினர்.

ஆனால் அந்த மர்மக் கும்பல் அவர்களை விரட்டிச் சென்று சுட்டுத்தள்ளியது. இந்தக் கொடூரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் புர்கினா பாசோவில் பயங்கரவாதத் தாக்குதல்கள் பெருகி வருகின்றன. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். (ரி1)



**ஹோட்டலில் தீ விபத்து**

## கொரோனா நோயாளிகள் 11 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஒக.10

இந்தியாவின், ஆந்திராவில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆந்திராவின் விஜயவாடாவில் கொரோனாத் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த ஹோட்டல் ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து நேற்று அதிகாலை ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த நேரத்தில் இந்தக் கட்டடத்தில் சுமார் 30 கொரோனாத் தொற்று நோயாளர்களும், பத்து மருத்துவப் பணியாளர்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

தீ அணைப்புப் படை வீரர்களின் துரித நடவடிக்கையினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது எனினும் இந்த அனர்த்தத்தில் சிக்கி 11 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். ஏனையவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு ஏனைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி1)

## கைத்தொலைபேசி வெடித்ததில் தாயும் இரு குழந்தைகளும் சாவு

புதுடில்லி, ஒக.10

இந்தியாவில் கரூர் அருகே கைத்தொலைபேசி வெடித்ததில் தாய் மற்றும் இரு குழந்தைகள் உட்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். வீட்டினுள் செல்போனை சார்ஜ் போட்டுவிட்டு, அருகில் நித்திரையில் இருந்த போது செல்போன் வெடித்ததால் ஏற்பட்ட தீ விபத்தால் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு படையினர், வீட்டில் சிக்கி இருந்த இரண்டு



மகன்களை மீட்டனர். பின்னர் இருவருக்கும் மூச்சுத் திணறல் ஏற்படவே, வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வழியில் உயிரிழந்துள்ளனர். (ரி1)

# பென் ஸ்டோக்ஸ் விலகல்

லண்டன், ஒக.10



இங்கிலாந்தின் ஓல் ரவுண்டரான பென் ஸ்டோக்ஸ் அவசரமாக நியூசிலாந்து செல்லவுள்ளதால், பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்டில் இருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பென் ஸ்டோக்ஸ், பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடி வருகிறார். இவர் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் துணைக் கப்டன் ஆவார். நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று 1: 0 என முன்னிலையில் இருக்கின்றது. பென் ஸ்டோக்ஸ் இரண்டாவது இன்னிங்ஸில் 3 இலக்குகள் வீழ்த்தி, பாகிஸ்தானை குறைந்த ஓட்டங்களில் தோல்வியடையச் செய்ய முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த நிலையில் அவர் உடனடியாக நியூசிலாந்து செல்லவுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் சபை மற்றும் பென் ஸ்டோக்ஸ் குடும்பம் ஆகியவை இது அவரது தனிப்பட்ட விஷயம் என்பதால் மேற்கொண்டு ஏதும் கேட்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ளன.

பென் ஸ்டோக்ஸின் பெற்றோர் நியூஸிலாந்தில் வசித்து வருகின்றனர். அவரது தந்தைக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து அவர் தற்போது வீட்டில் குணமாகிவருகிறார். இந்நிலையில் தற்போது அவர் நியூசிலாந்து செல்லவுள்ளார். பென் ஸ்டோக்ஸ் நியூசிலாந்தில் பிறந்து இங்கிலாந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.(ரி2)




# சாஹலை வீழ்த்திய நடன இயக்குநர்!

புதுடில்லி, ஒக.10

இந்திய சுழற்பந்து வீச்சாளர் சாஹலுக்கும் பெண் நடன இயக்குநரான தனஸ்ரீ வர்மாவுக்கும் குடும்பத்தினர் சம்மதத்துடன் நேற்றுமுன்தினம் நிச்சயதார்த்தம் இடம்பெற்றுள்ளது.

இவர் இந்தியாவுக்காக ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் பங்கேற்கும் முக்கியமான பந்துவீச்சாளர். இவர் ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்காகவும் விளையாடி வருகின்றார். இந்தநிலையில் 30 வயதான சாஹல் தற்போது நடன இயக்குநர் தனஸ்ரீ வர்மா என்ற பெண்ணுடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்டார் என தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார். அவருக்கு சகல கிரிக்கெட் வீரர்களும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (ரி2)





# ஏலம் விடப்படவுள்ள மகாத்மாவின் மூக்குக் கண்ணாடி

**மதிப்பு 15,000 டொலர்கள்**

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், அரசியல் தலைவருமான 'தேசத் தந்தை' மகாத்மா காந்தியின் மூக்குக் கண்ணாடியொன்று ஏலத்துக்கு விடப்படவுள்ளது.

இம்மாதம் 21ஆம் திகதி கிழக்கு பிரிஸ்டோலில் இருந்து காந்தியின் மூக்குக் கண்ணாடி இணையம் மூலம் விற்பனையாக வுள்ளது.

பிரிஸ்டோலில் வரலாற்று சிறப்புமிக்க பொருள்களை ஏலத்துக்கு விற்பனை செய்யும் இடத்தில் காந்தி பயன்படுத்திய கண்ணாடி ஒன்று கண்டறியப் பட்டுள்ளது. அங்கு ஒரு காகித உறையில் காந்தியின் மூக்குக் கண்ணாடி பாதுகாக்கப்பட்டுள்ளது.

1920ஆம் ஆண்டு காந்தி தெனாபிரிக்காவில் வசித்தபோது அவரைச் சந்தித்த நபர் ஒருவருக்கு இந்த மூக்குக் கண்ணாடி கிடைத்தது எனவும், அவர்கள் தலைமுறைகளாக அதைப் பாதுகாத்து வருகின்றனர் எனவும் கண்ணாடியை ஏலம் விட முயற்சிக்கும் அதன் உரிமையாளர் கூறுகிறார்.

மேலும் காந்தி தென்னாபிரிக்காவில் வசித்தபோதுதான் முதன் முறையாக மூக்குக் கண்ணாடிகளைப் பயன்படுத்தத் தொடங்கினார் என்றும், காந்தியின் கண்ணாடிகளை தங்களிடம் ஒப்படைத்த உரிமையாளர் அளிக்கும் தகவல்கள் அனைத்தும் சரியாக உள்ளன என்றும் கிழக்கு பிரிஸ்டோலில் ஏலம் விடும் தொழில் மேற்கொள்ளும் ஆண்ட்ரூ ஸ்டோவ் கூறுகிறார்.

இந்த நிலையில் காந்தியின் மூக்குக் கண்ணாடியின் மதிப்பு 15,000 டொலர்களுக்கு விற்பனையாகும் என கணிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக இந்த தங்க நிற முலாம் பூசிய பிரேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளைத்தான் காந்தி முதன்முதலில் பயன்படுத்தியிருக்க வேண்டும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார். "தனது உடைமைகளைப் பிறருக்கு அளிக்கும் பழக்கம் கொண்டவர் காந்தி" என்றும் ஆண்ட்ரூ ஸ்டோவ் குறிப்பிடுகிறார். குறிப்பாக இந்தக் கண்ணாடியை ஏலத்தில் வாங்குவதற்கு இந்தியாவில் பலர் விரும்புவார்கள், ஆனால் அதிர்ஷ்டவசமாகக் காந்தியின் மூக்குக் கண்ணாடி தங்களை வந்து சேர்ந்துள்ளது என்றும் ஆண்ட்ரூ கூறுகிறார்.



# சம்பியனானார் பியோனா ஃபெரோ

ரோம், ஒக.10

மகளிர் 'ஃபெமினிலி டி பலேர்மோ' பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடரின், மகுடத்துக்கான பரபரப்பான இறுதிப் போட்டியில், பிரான்ஸின் பியோனா ஃபெரோ வெற்றிபெற்று சம்பியனாகியுள்ளார்.

இரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், பிரான்ஸின் பியோனா ஃபெரோ, எஸ்டோனியாவின் அனெட் கொன்டாவிட்டை எதிர்கொண்டார்.

விறுவிறுப்புடன் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை பியோனா ஃபெரோ 6:2 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், பியோனா ஃபெரோவுக்கு, அனெட் கொன்டாவிட் கடும் நெருக்கடி கொடுத்தார்.

எனினும், மனம் தளராது சிறப்பாக விளையாடிய பியோனா ஃபெரோ, இரண்டாவது செட்டை 7:5 என்ற கணக்கில் போராடிக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தைப் வென்றார். (ரி2)

## பிரதமரின்...

கொழும்பு, ஒக. 11

பிரதமரின் செயலராக காமினி செனரத் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பொதுத் தேர்தலில் பெரமுன பெரும் வெற்றியைப்பெற்று ஆட்சியமைக்கவுள்ள நிலையில், புதிய அரசின் பிரதமராக மஹிந்த ராஜபக்ச நேற்றுப் பதவியேற்றார். இதையடுத்தே அவரின் செயலராக காமினி செனரத் இன்று நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 10.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.